முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், கோயமுத்தூர்.

முன்னிலை: திருமதி.A.P. லதா, பி.எஸ்.ஸி., பி.எல்.,

முதன்மை  தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்

புதன்கிழமை, 4ம் நாள், பிப்ரவரி மாதம் 2026ம் வருடம்.

தொழிற்தாவா எண்.69/2024

(CNR No.TNCB-04-000348-2024)

பொதுச் செயலாளர்,

கோவை அரசு போக்குவரத்து ஊழியர் சங்கம் (சிஐடியு),

109, பார்க் வீதி,

காட்டுர்,

கோயம்புத்தூர் - 641 009. ….. மனுதாரர்

~ எதிராக ~

நிர்வாகம்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,

கோவை லிமிடெட்டுக்காக,

37 மேட்டுப்பாளையம் சாலை,

கோயமுத்தூர் - 641 043. ….. எதிர்மனுதாரர்

இந்த வழக்கு கடந்த 02.02.2026ம் தேதியன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.B.ஜோதிகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி.K.T.கன்னிகாசங்கரேஸ்வரி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மற்றும் வழக்கு கோப்புக்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் எனது பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் :-

## முதல்நிலை தீர்வம்

மனுதாரர் தொழிற்சங்கம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு எதிராக தொழிற் தகராறு சட்டம் 1947 பிரிவு 2(K)ன் கீழ் கோவை தொழிலாளர் அலுவலர் முன்பாக

ஒரு மனு தாக்கல் செய்து, மனுதாரர் திரு.C.ஆனந்தகுமார், என்ற ஓட்டுநருக்கு (ப.எண்.C20029), வருடாந்திர ஊதிய உயர்வினை 2 வருட காலத்திற்கு பின்தொடர்ச்சியுடன் தள்ளி வைக்கவும், 29.09.2010 முதல் 28.10.2010 வரை தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்த 30 நாட்களை, அவரது விடுப்பு கணக்கில் நிலுவையில் உள்ள விடுப்பு நாட்களை பொருத்து, விடுப்பாக கருதி, நிர்வாகம் வழங்கியுள்ள 10.08.2011 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியிருந்த மனுவானது தொழிற்தாவா விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது சமரசம் ஏற்படவில்லை என்பதால் 30.03.2023 தேதியில் சமரச அதிகாரி தனது சமரச முறிவு அறிக்கையை மாநில அரசுக்கு சமர்பித்தார். அதனை ஏற்றுக் கொண்ட தமிழக அரசு கீழ்கண்ட எழுவினாவிற்கு பதில் அளிக்க இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

G.O. (D) No.821 Labour and Employment (D-1) Department, dated 19.11.2024.

எழுவினா

மனுதாரர் திரு.C.ஆனந்தகுமார், என்ற ஓட்டுநருக்கு (ப.எண்.C20029), வருடாந்திர ஊதிய உயர்வினை 2 வருட காலத்திற்கு பின்தொடர்ச்சியுடன் தள்ளி வைக்கவும், 29.09.2010 முதல் 28.10.2010 வரை தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்த 30 நாட்களை, அவரது விடுப்பு கணக்கில் நிலுவையில் உள்ள விடுப்பு நாட்களை பொருத்து, விடுப்பாக கருதி, நிர்வாகம் வழங்கியுள்ள 10.08.2011 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்".

2. மனுவின் சுருக்கம் :

மனுதாரர் சங்கம் போக்குவரத்து ஊழியர்களின் சட்டம் சார்ந்த உரிமைகளுக்காக சட்டம் வகுத்து கொடுத்துள்ள வழிகாட்டுதலின் படி கூட்டு பேர நடவடிக்கையில் ஈடுபட்டு தொழில் அமைத்து ஏற்படுத்திக் கொண்டிருக்கும் முறையாக பதிவு செய்த சங்கமாகும். எதிர்மனுதாரரின் நிறுவனம் தமிழக அரசின் போக்குவரத்து துறையின் கீழ் இயங்கி வரும் கார்ப்பரேஷன் ஆகும். மனுதாரரின்

சங்க உறுப்பினருக்கு1/ஜி5/474/தஅபோக/2010 நாள் 19.10.2010 தேதியிட்டு குற்றச்சாட்டு குறிப்பாணையினை எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்கியது. அதில் சங்க உறுப்பினர் 25.09.2019 தேதி அன்று TN-38-N-1492 ஓட்டுனராக பணிபுரிந்த போது, இரவு எட்டு மணி அளவில் கோடாங்கிபாளையம் பிரிவுக்கு முன்பாக பேருந்தை வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சாலையில் நடுக்கோட்டை தாண்டி சென்று வலது புறம் இருந்து சாலையை கடந்த ஒரு ஆண் பாதசாரி மீது பேருந்தின் முன் வலதுபுற பாடி மோதியதில் தூக்கி வீசப்பட்டு தலையில் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே மரணம் அடைந்துள்ளார். சங்க உறுப்பினரின் இவ்விபத்தால் கழக பேருந்துக்கு 108 கீ.மீட்டர் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் சங்க உறுப்பினர் மோட்டார் வாகன சட்டங்களை மீறியும் பேருந்தை வேகமாகவும், கவனக்குறைவாகவும், ஆஜாக்கிரதையாகவும் ஓட்டி சாலையின் வலது புறம் சென்று சாலையை கடந்த பாதசாரி மீது மோதி பாதசாரி மரணம் அடைய காரணமாகி உள்ளது நிறுவன நிலையாணை 14(a)

(ad)க்கு உட்பட்ட ஒழுங்கீனமாகும். இது குறித்து ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கூடாது எனவும், பேருந்திற்கு ஏற்பட்ட 108 கீ.மீட்டருக்கு இழப்புக்கான வருமான இழப்பை ஏன் சங்க உறுப்பினரின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யக்கூடாது எனவும், இது குறித்து தக்க நடவடிக்கை எடுத்து, முடியும் வரை 29.09.2010 முதல் விசாரணை முடிவுரை தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுகிறது என்றும், இது குறித்து சங்க உறுப்பினரின் சமாதானத்தை எழுத்து மூலமாகத் தெரிவிக்கவும், தவறினால் சங்க உறுப்பினரால் கூறிக்கொள்ளத் தக்க சமாதானம் எதுவும் இல்லை என கருதி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியிருந்தது.

3. அதற்கு மனுதாரர் சங்கத்தின் உறுப்பினர் சி.ஆனந்தகுமார் அவர் மீதான குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு மறுப்பு மற்றும் உண்மை நிலையையும், தனது விளக்கத்தையும் 27.10.2010 தேதியிட்டு சமர்ப்பித்திருந்தார். சம்பவத்தன்று நடந்த உண்மை நிகழ்வையும், அதற்கான சங்க விளக்கத்தையும் சமர்ப்பித்தத்தை ஏற்காமல் எதிர்மனுதாரர் நிர்வாகம் உள்ளக விசாரணையை சட்டத்திற்கு

புறம்பாகவும் ஒரு தலை பச்சமாகவும் மேற்கொண்டது. உடன் பணிபுரிந்த நடத்துனரை விசாரணை செய்யாமல் இருப்பதும், மேலும் குற்றம் சாட்டப்பட்ட சங்க உறுப்பினர் அவரது வாக்குமூலத்தின் மூலம் கூடுதல் விளக்கத்தையும், உள்ளக விசாரணையில் சமர்ப்பித்ததையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மனுதாரர் சங்கம் உறுப்பினரின் சாட்சியாக சம்பவத்தை நேரில் கண்ட J.சுந்தர் என்பவர் 28.09.2010 தேதியிட்டு எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு கடிதம் எழுதியும், விசாரணையில் நேரில் ஆஜராகியும் சம்பவத்தின் உண்மை தன்மையை உறுதி செய்துள்ளார். நி.த. சாட்சி தனது புகாருக்கு ஆதரவாக நேரில் கண்ட சாட்சிகள் யாரையும் ஆஜர் படுத்தவில்லை. எதிர்மனுதாரர் நிர்வாகம் குற்றம் சாட்டப்பட்ட சங்க உறுப்பினருக்கு 25.05.2011 தேதியிட்ட குறிப்பாணையில் உள்ளக விசாரணை அதிகாரியின் அறிக்கை மட்டும் வழங்கியது. மேலும் அதில் விசாரணை அதிகாரியின் அறிக்கையை பரிசீலித்த நிர்வாகம் அதை ஏற்றுக்கொள்ள உத்தேசித்துள்ளது என்றும், விசாரணை அதிகாரியின் முடிவை நிர்வாகம், ஏன்

ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதற்கு சங்க உறுப்பினரின் ஆட்சேபனை ஏதும் இருப்பின் அதை பொது மேலாளர் அவர்களுக்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி சங்க உறுப்பினர் அனுப்பிய கடிதத்தின் மூலம் அவரது ஆட்சேபனையையும், விளக்கத்தையும் மற்றும் உள்ளக விசாரணை ஒரு தலை பட்சமாக நடைபெற்று உள்ளது என்பதையும் விளக்கியும், மேலும் உள்ளக விசாரணை நடவடிக்கை குறிப்புகள் எதுவும் வழங்காமல், வெறும் முடிவு அறிக்கையை மட்டுமே வழங்கி அதன் அடிப்படையில், சங்க உறுப்பினர் தாக்கல் செய்துள்ள கூடுதல் விளக்கத்தையும் ஏற்காமல் விசாரணை முடிவினை ஏற்றது. உள்ளக விசாரணை நியதிக்கும் முரணான செயலாகும் என்று விளக்கத்தையும் அளித்தும், அதை எதிர்மனுதாரர் நிர்வாகம் பெற்றுக் கொண்டு அந்த விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று கூறி, கடந்த 11.07.2011ம் தேதியிட்ட உத்தேச தண்டனை அறிவிப்பு வழங்கியது.

4. சங்க உறுப்பினர் அவரது சமாதானத்தையும் மற்றும் தமக்கு உள்ளக விசாரணை அதிகாரிகள் வாய்ப்புகள் வழங்காத காரணத்தையும், மேலும் உள்ளக விசாரணை அறிக்கையை எதிர்மனுதாரர் நிர்வாகம் ஏற்றுக் கொண்டதற்கான காரணத்தை கூறாமல் தந்த ஆட்சேபனைகளை என்னென்ன காரணத்தால் நிராகரிக்கப்பட்டது என்று கூறாமல் அதற்கான விளக்கத்தையும் அல்லது சமாதனத்தையோ தெரிவிக்க கூறி இருப்பது தவறு என்றும், அச்செயல் சட்டத்திற்கும், இயற்கைக்கு நீதிக்கு எதிரானது என்று கூறி 24.07.2011ம் தேதியிட்ட கடிதத்தை நிர்வாகத்திற்கு சமர்ப்பித்தார். அதை வேண்டுமென்றே பரிசீலிக்காத நிர்வாகம் சங்க உறுப்பினருக்கு 10.08.2011 தேதியிட்ட உத்தரவு ஒன்றை வழங்கியது. அதில் மேற்படி உத்தேச தண்டனை அறிவிப்புக்கு சங்க உறுப்பினர் அளித்த சமாதானம ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றும், தண்டனையாக ஊதிய உயர்வு இரண்டு வருட காலத்திற்கு பின் தொடர்ச்சியுடன் தள்ளி வைத்து உத்தரவிடப்பட்டிருந்தது. இந்த உத்தரவை எதிர்த்து சங்க உறுப்பினர் 27.01.2012ம்

தேதி மேற்படி எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் மேலாண்மை இயக்குனருக்கு மேல்முறையீடு செய்தார். சங்க உறுப்பினர் சி.ஆனந்தகுமாரின் தண்டனை ரத்து செய்யும்படி செய்த மேல்முறையீட்டு கடிதத்தை இன்றுவரை பரிசிலீக்காமல் கிடப்பில் போட்டுள்ளது. மேலும் எந்தவித பலனும் கிடைக்காததால் மேற்படி உத்தரவனை எதிர்த்து கோவை தொழிலாளர் அலுவலகம் முன்பு தொழில் தகராறு சட்டம் 1947 பிரிவு 2(k)ன் படி மனுதாரர் சங்கத்தால் தாவா எழுப்பப்பட்டுள்ளது.

5. மேலும் உள்துறை விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர் தனது நியாயமான விளக்கத்தை சமர்ப்பித்ததையும், மேலும் விசாரணை அதிகாரி நிர்வாகத் தரப்பு சாட்சியின் அர்த்தமற்ற சாட்சியத்தையும், குற்றச்சாட்டினை நிருபிக்கும் எந்த விதமான ஆதாரத்தையும் சமர்ப்பிக்காமல் இருந்துள்ளதையும், மேலும் நிர்வாக தரப்பு சாட்சியை குற்றச்சாட்டப்பட்டவர் குறுக்கு விசாரணை செய்தபோது, குற்றம் சாட்டப்பட்டவர் மீது அவர் குற்றம் செய்ததற்கான எந்த விதமான முகாந்திர பதில்களையும் நிர்வாகத்திரப்பு சாட்சி சொல்லாததிலிருந்தும்

நிர்வாக சார்பாக அறிவித்துள்ள முடிவுகள் ஒரு தலைபட்சம் பயாஸ் (BIAS) மற்றும் நெறிபிறழ்ந்தது (PERVERSITY) ஆகும். மேலும் ஊதிய உயர்வை பின்தொடர்ச்சியுடன் தள்ளி வைத்து தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் தண்டனை உத்தரவை வழங்க அதிகாரிக்கு உள்ளது என்று போக்குவரத்துக் கழக நிலையாணையில் எந்த பிரிவிலும் சொல்லப்படவில்லை. மேலும் சங்க உறுப்பினர் ஓட்டுநர் சி.ஆனந்தகுமாருக்கு நிர்வாகம் வழங்கியிருக்கும் தண்டனை ஊதிய உயர்வு இரண்டு வருட காலத்திற்கு பின் தொடர்ச்சியும் தள்ளி வைக்கும் தண்டனை ஆகும். ஒரு குற்றத்திற்கு தற்காலிக வேலை நீக்கம், ஊதிய உயர்வு நிறுத்தம் அதுவும் பின் தொடர்ச்சியின் தள்ளி வைக்கும் பிரிவு போக்குவரத்து கழக நிலையானையில் இல்லை. இது நிலையாணைக்கு புறம்பாக தண்டனை வழங்கப்பட்டுள்ளது. எனவே, சங்க உறுப்பினர் சி.ஆனந்தகுமாருக்கு வழங்கிய 10.8.2011 தேதியிட்ட தண்டனையான வருடாந்திர ஊதிய உயர்வு இரண்டு வருட காலத்திற்கு பின் தொடர்ச்சியுடன் தள்ளி வைக்கும் உத்தரவினை ரத்து செய்து

அதனால் கிடைக்கக்கூடிய பணம் மற்றும் சட்ட பலன்களை எதிர்மனுதாரர் நிர்வாகம் சங்க உறுப்பினருக்கு எதிர் மனுதாரா நிர்வாகம் வழங்க வேண்டும் என்று இந்த கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :

மனு சட்டபடி நிலைக்கத்தக்கதல்ல. சங்கஉறுப்பினர் திரு.C.ஆனந்தக்குமார், ப.எண்.C20029 என்பவர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் ஓட்டுநர் பணி காலியிடம் ஏற்பட்டதால் வேலை வாய்ப்பு அலுலவகத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு, 19.08.2006 முதல் ஓட்டுநராக பணியில் சேர்ந்து பல்வேறு கிளைகளில் பணிபுரிந்து தற்பொழுது எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் சுங்கம்-1 கிளையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகின்றார். சங்க உறுப்பினர் 25.09.2010ம் தேதியன்று சுங்கம்-1 கிளையில் ஓட்டுநராக TN-38-N-1492ல் திருப்பூர் to கோவை வழித்தடத்தில் பணிபுரிந்த பொழுது ஏற்படுத்திய உயிரிழப்பு தொடர்பாக எதிர்மனுதார நிர்வாகம் வழங்கிய 1/ஜி5/474/தஅபோக/2010, நாள் 10.08.2011

தேதியிட்ட உத்தரவில் வருடாந்திர ஊதிய உயர்வை இரண்டு வருட காலத்திற்கு பின் தொடர்ச்சியுடன் தள்ளி வைத்து உத்தரவை ரத்து செய்து, அதனாம் கிடைக்கக்கூடிய பணப்பலன்களை வழங்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. சங்க உறுப்பினர் கடந்த 25.09.2010ம் தேதியில் நடைபெற்ற சம்பவத்திற்கு, சுமார் 15 ஆண்டுகள் கழித்து, எதிர்மனுதாரர் நிர்வாகம் பிறப்பித்த 10.08.2011 உத்தரவிற்கு சுமார் 14 ஆண்டுகள் கழித்து நிவாரணம் வேண்டுவது எவ்வகையிலும் ஏற்புடையது அல்ல. மனுதாரர் சங்கம் பத்தி 1ல் சங்க மனுதாரர் உயிரிழப்பு ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிர்மனுதாரர் நிர்வாகம் தண்டனை வழங்கி உள்ளது என்பதை மறைத்துள்ளது. மேலும் சங்க உறுப்பினர் திரு.C.ஆனந்தகுமார், ப.எண்.C20029 என்பவரிடம் வழக்கு நடத்த எழுத்த பூர்வமாக கடிதம் பெறவில்லை. மேலும் தீர்மான நகல் ஏதும் தாக்கல் செய்யவில்லை. இக்கோரிக்கை கோவை தொழிலாளர் உதவி ஆணையர் முன்னிலையில் நிர்வாகத்தின் சார்பாக

வலியுறுத்தப்பட்டது. சங்க உறுப்பினர் கடந்த 25.09.2010ம் தேதியில் நடைபெற்ற சம்பவத்திற்கு சுமார் 11 ஆண்டுகள் கழித்து நீதிமன்றத்தை நாடியுள்ளார். மேலும் எதிர்மனுதாரர் நிறுவனம் தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கி வரும் ஒரு அத்தியாவசியமான பொது சேவை நிறுவனமாகும். தமிழக அரசின் உத்தரவுகளுக்கும், ஆணைகளுக்கும் வழிகாட்டுதலுக்கு ஏற்ப செயல்பட வேண்டியுள்ளது. எதிர்மனுதாரர் நிறுவனம் நிதி நிலைமை பற்றாக்குறையில் இயங்கி வரும் நிறுவனம் என்பதை மனுதாரரும், மனுதாரர் சங்கமும் நன்கு அறிந்தும் காலம் தாழ்த்தி எப்போது வேண்டுமானாலும் தொழில்தாவாவை கிளப்பி பணப்பலன்களை அடையலாம் என்ற எண்ணம் தோன்றியுள்ளது. இது எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணியில் உள்ள 10,000க்கும் மேற்பட்ட தொழிலாளர் மத்தியிலும் மற்ற அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத்தின் மத்தியிலும் ஏற்பட்டால் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்படும். மேலும் சங்கஉறுப்னிரின் தவறான உள்நோக்கத்துடன் தாக்கல் செய்துள்ள இம்மனுவை

இந்நீதி ன்றம் அனுமதித்தால் இது ஒரு தவறான முன் உதாரணமாக அமைந்து தொழில் உறவு பாதிப்பு ஏற்படும் என்பதை எதிர்மனுதாரர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

8. மனுதாரர் சங்கம் பத்தி-2ல் தெரிவித்துள்ளது பொதுவானவை ஆகும். மனுதாரர் சங்கம் பத்தி 3ல் தெரிவித்துள்ளபடி, சங்க உறுப்பினர் மோட்டார் வாகன சட்டங்களின் விதிகளை மீறி செயல்பட்டதும், பேருந்தை வேகமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஒட்டி சாலையின் வலது புறம் சென்று சாலையை கடந்த பாதசாரி மீது மோதி பாதசாரி மரணம் அடைய காரணமாக இருந்துள்ளார். சங்க உறுப்பினர் பணியில் ஏற்பட்ட உயிரிழப்பு விபத்து குறித்து காவல் துறையில் FIR பதிவு செய்த பின்னரே சங்க உறுப்பினருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் சங்கம் பா.எண் 1/ஜி5/474/தஅபோக/2010 நாள்.19.10.2010ல் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளதாக கூறும் சங்கம் 25.09.2019 தேதியில் TN-38-N-1492 என்ற

பேருந்தில் பணிபுரிந்த பொழுது என்று மனுதாக்கல் செய்து உள்ளது, இதில் எது உண்மை என்று நிரூபிக்க கடமைப்பட்டதாகும்.

9. 25.09.2010 தேதியன்று **TN**-38-**N**-1492 எண்ணிட்ட பேருந்தில் சங்க உறுப்பினர் ஓட்டுநராக பணிபுரிந்தபோது ஏற்படுத்திய சாலை விபத்தில் ஆண் பாதசாரி ஒருவர் மரணமடைந்து விட்டார். குற்றச்சாட்டு குறிப்பாணை பெற்றுக்கொண்ட சங்க உறுப்பினர் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு 27 10.2010 நாளிட்ட கடிதம் தாக்கல் செய்துள்ளார். சங்க உறுப்பினர் 25.09.2010 தேதியில் பேருந்து எண்.**TN**-38-**N**-1492ல் பணியில் இருந்த போது ஏற்படுத்திய உயிரிழப்பு விபத்து தொடர்பாக பா.எண்.1/ஜி5/474/தஅபோக/2010 நாள்.19.10.2010ன்படி 29.09.2010ம் தேதி முதல் விசாரணை முடிவுறா தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். சங்க உறுப்பினர் 25.09.2010ம் தேதியன்று ஏற்படுத்திய உயிரிழப்பு விபத்து காரணமாக ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகம் இல்லாமல் நிர்வாகத்தின் இடைக்கால உத்தரவின்படி பா.எண்.1/ஜி5/474/தஅபோக/2010,

நாள்.28.10.2010ன்படி மனுதாரர் 29.10.2010ம் தேதி மீண்டும் பணியில் சேர உத்தரவிடப்பட்டது. சங்க உறுப்பினர் ஏற்படுத்திய உயிரிழப்பு விபத்து தொடர்பாக சங்க உறுப்பினர் தாக்கல் செய்த சமாதானம் ஏற்புடையதல்ல என்பதால் அவர் மீதான குற்றச்சாட்டு தொடர்பாக சட்டம் மற்றும் இயற்கை நியதிக்கு உட்பட்டு உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்வுள்ளக விசாரணையில் சங்க உறுப்பினர் மீதான எதிர்மனுதாரர் நிறுவனத்தின் நிலையாணை பிரிவு 14(a) (ad)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணம் ஆனதாக விசாரணை அதிகாரி முடிவு செய்து 25.05.2011 தேதியன்று விசாரணை அறிக்கை தாக்கல் செய்தார்.

10. சங்க உறுப்பினர் 11.02.2011 தேதியிட்டு கொடுக்கப்பட்ட அறிவிப்டை பெற்றுக்கொண்டு சமாதானம் தெரிவித்த நிலையில் பா.எண்.1/ஜி5/474/தஅபோக/2010, நாள்.10.08.2011 தேதியிட்ட உத்தரவின்படி சங்க உறுப்பினர் ஏற்படுத்திய உயிரிழப்பு விபத்திற்கு கடும் நடவடிக்கை எடுக்கலாமெனினும் நிர்வாகம் கருணை கொண்டு சங்க உறுப்பினருக்கு

வழங்கவுள்ள வருடாந்திர ஊதிய உயர்வை 2 வருட காலத்திற்கு பின்தொடர்ச்சியுடன் தள்ளி வைக்கவும், சங்க உறுப்பினர் ஏற்கனவே தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்த 29.09.2010 முதல் 28.10.2010 வரையிலான 30 நாட்களை சங்க உறுப்பினரின் விடுப்பு கணக்கில் நிலுவையில் உள்ள விடுப்பு நாட்களை பொறுத்து விடுப்பாக கருதியும் உத்தரவு வழங்கி ஆணையிடப்பட்டது. மனுதாரர் சங்கம் மனுவில் தெரிவித்துள்ளது ஏற்புடையது அல்ல. சங்க உறுப்பினர் பணியின் போது ஏற்படுத்திய உயிரிழப்பு விபத்து தொடர்பாக முறைப்படி குற்றச்சாட்டு குறிப்பாணை சங்க உறுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது. சங்க சங்க உறுப்பினர் விளக்கங்கள் சமர்ப்பிக்க போதிய அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. முறைப்படி உள்ளக விசாரணை நடத்தப்பட்டுள்ளது. உள்ளக விசாரணை அறிக்கை நகலும் வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பணியாளர் கோரிய ஆவண நகல்கள் வழங்கப்பட்டு உரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

11. மேலும் உயிரிழப்பு விபத்திற்கு பாதிக்கப்பட்டவர்கள் திருப்பூர் நீதிமன்றத்தில் எம்.சி.ஓ.பி. வழக்கு 1405/2010 தொடர்ந்து ரூ.15 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டி வழக்கு தொடுத்து, ஷை வழக்கை விசாரித்த மாண்புமிகு நீதிமன்றம் ரூ.8,54,000/-ஐ 7.5%, ரூ.23,463/- செலவு தொகையுடன் செலுத்த உத்தரவிட்டதை தொடர்ந்து ரூ.2,54,510/- வட்டியுடன் சேர்த்து ரூ.11,08,510/-ஐ 10.09.2019 அன்று பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் நிர்வாகம் சங்கஉறுப்பினருக்கு எதிராக சட்ட விதிகளுக்கு புறம்பாகவோ, எதிர்மனுதாரர் நிறுவனத்தின் நிலையாணைகளுக்கு புறம்பாகவோ, வேண்டுமென்றே பழிவாங்கும் நோக்கத்தோடோ, செயல்படவில்லை. சங்கஉறுப்பினர் கடந்த 25.09.2010 அன்று பேருந்தை கவனக் குறைவாகவும். அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை மதிக்காமல் பேருந்தை இயக்கி நடுக்கோட்டை தாண்டிச் சென்று வலதுபுறமிருந்து சாலையை கடந்த ஒரு ஆண் பாதசாரி மீது பேருந்தின் முன் வலதுபுற பாடி மோதியதில் தூக்கி வீசப்பட்டு

தலையில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழக்க காரணமாக இருந்துள்ளார். இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டிய நிலையில் எதிர்மனுதாரர் நிர்வாகம் உள்ளது. இந்த சம்பவத்திற்கு சுமார் 15 ஆண்டுகள் கழித்தும் எதிர்மனுதாரர் நிர்வாகம் பிறப்பித்த உத்தரவுக்கு 14 ஆண்டுகள் கழித்தும் இம்மன்றத்தை நாடி உள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

12. எழுவினா :

இரு தரப்பு வாதங்களும் கேட்டு இந்த நீதிமன்றம் கீழ்காணும் முதல்நிலை எழுவினா வணைந்தது.

எதிர்மனுதாரர் நிர்வாகம் நடத்தியுள்ள உள்ளக விசாரணை சரியாகவும், முறையாகவும் நடந்துள்ளதா?

13. சான்றாவணமும், சாட்சியமும் :

மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை. தொ.சா.ஆ.1 முதல் தொ.சா.ஆ.9வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

14. தீர்வு :

மனுதாரர் தரப்பில் 19.10.2010 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு உரிய பதிலை 27.10.2010 அன்று தெரிவித்திருந்தார் எனவும், அந்த விளக்கத்தை ஆவணங்களுடன் சரியாக பரிசீலனை செய்யாமல் ஒருதலை பட்சமாக எதிர்மனுதாரர் உள்ளக விசாரணை நடத்தினார் எனவும், உள்ளக விசாரணையின் போது உரிய ஆவணங்களை மனுதாரருக்கு வழங்கவில்லை எனவும், உள்ளக விசாரணை அதிகாரி சம்பவபேருந்தில் பயணம் செய்த சுந்தர் என்பவருடைய 28.10.2010 நாளிட்ட கடிதத்தை சரிவர பரிசீலனை செய்யவில்லை எனவும், விசாரணையின் போது சங்க உறுப்பினருக்கு உரிய வாய்ப்புகள்

வழங்கப்படவில்லை எனவும், எனவே, உள்ளக விசாரணையானது சரியாகவும், முறையாகவும் நடத்தப்படவில்லை என்பதாக வாதிட்டார்.

15. எதிர்மனுதாரர் தரப்பில் வழங்கப்பட்ட தண்டனை உத்தரவிற்கு சுமார் 14 வருடங்கள் கழித்து மனு தாக்கல் செய்யப்பட்டது எனவும், அது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல எனவும், உள்ளக விசாரணையின் போது சங்க உறுப்பினருக்கு உரிய வாய்ப்புகள் வழங்கப்பட்டது எனவும், எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

16. சங்க உறுப்பினருக்கு வழங்கப்பட்ட 19.10.2010 நாளிட்ட எ.சா.ஆ.4 குற்றச்சாட்டு குறிப்பாணையை பரிசீலனை செய்கையில் 29.09.2010 முதல் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதற்காக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டது என்பதற்கு எந்த காரணமும் குறிப்பிடப்படவில்லை. சங்க உறுப்பினரின் நிலையாணைகள் பிரிவு 15(d)ன் கீழ்

தற்காலிகப்பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். நிலையாணைகள் பிரிவு 15(d)ன் கீழ் தற்காலிக பணிநீக்கம் செய்யும் பொழுது தனியாக ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும், அதற்குரிய காரணங்களை அந்த உத்தரவில் தெரிவித்து, சம்மந்தப்பட்ட தொழிலாளிக்கு தெரிவிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எ.சா.ஆ.4ல் எந்த வித காரணமும் குறிப்பிடாமல் சங்க உறுப்பினரை தற்காலிக பணி நீக்கம் செய்துள்ளார். உத்தரவில் எந்த காரணமும் குறிப்பிடாததால் தற்காலி பணி நீக்கம் நிலையாணைகள் பிரிவு 15(d)க்கு புறம்பானது என்பதாக முடிவு செய்யப்படுகிறது.

17. எ.சா.ஆ.4 குற்றச்சாட்டு குறிப்பாணையில் கீழ்கண்டவாறு சங்க உறுப்பினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

“25.09.2019 தேதி அன்று சுங்கம் - 1 கிளையைச் சேர்ந்த பேருந்து எண்.TN-38-N-1492ல் ஓட்டுனராக மாலை சிப்டில் பணிபுரிந்துள்ளீர். அன்று 7.20 மணிக்கு திருப்பூரில் புறப்பட்டு கோவை சென்ற போது இரவு சுமார் 8.00 மணிக்கு

கோடாங்கிபாளையம் பிரிவுக்கு முன்பாக பேருந்தை வேகமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி சாலையில் நடுக்கோட்டை தாண்டிச் சென்று வலது புறம் இருந்து சாலையை கடந்த ஒரு ஆண் பாதசாரி மீது பேருந்தின் முன் வலதுபுற பாடி மோதியதில் தூக்கி வீசப்பட்டு தலையில் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே மரணம் அடைந்துள்ளார் என்றும், இவ்விபத்தால் கழக பேருந்துக்கு 108 கீ.மீ இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், உம்மீது வந்துள்ள விபத்தறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும் நீர் மோட்டார் வாகன சட்டங்களை மீறி செயல்பட்டதும், பேருந்தை வேகமாகவும், கவனக்குறைவாகவும், ஆஜாக்கிரதையாகவும் ஓட்டி சாலையின் வலது புறம் சென்று சாலையை கடந்த பாதசாரி மீது மோதி பாதசாரி மரணம் அடைய காரணமாகி உள்ளீர். மேற்படி உமது செயலானது இந்நிறுவன நிலையாணை 14(a)(ad)க்கு உட்பட்ட ஒழுங்கீனமாகும். குற்றச்சாட்டு குறிப்பாணையை பரிசீலனை செய்கையில் விபத்தில் இறந்துபோன ஆண் பாதசாரி வலதுபுறம் இருந்து சம்பவ ரோட்டை கடந்த போது பேருந்தின் முன்

வலதுபுற பாடி மோதியதில் விபத்து ஏற்பட்டது எனவும், அந்த செயலானது சங்க உறுப்பினரின் கவனக்குறைவாலும், ஆஜாக்கிரதையாலும் நடந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எ.சா.ஆ.2 விபத்தறிக்கையில் பரிசீலனை செய்கையில் சம்பவ இடத்தில் பேருந்து மேற்கு நோக்கி ஓட்டிச் செல்லும் பொழுது இறந்து போன நபர் வலது புறம் இருந்து சாலையை கடக்க முயன்ற போது சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே குற்றச்சாட்டு குறிப்பாணை, எதிர்மனுதாரரின் விரிவான விபத்தறிக்கை ஆகியவற்றை பரிசீலனை செய்கையில் இறந்து போன நபர் கிழமேல் சாலையை வலது புறத்தில் இருந்து கடக்க முயன்றபோது விபத்து ஏற்பட்டதாக தெரிய வருகிறது. எனவே எதிர்மனுதாரர் தரப்பு வழக்கு என்ன வென்றால் சம்பவ இடத்தில் சாலையை வலதுபுறம் இருந்து கடக்க முயன்றபோது விபத்து நடந்தது என்பதாகும். எ.சா.ஆ.2 உடன் இணைக்கப்பட்ட வரைபடத்தை பார்வையிடுகையில் பேருந்தானது கிழமேல் சாலையில் கிழக்கிலிருந்து மேற்காக சென்று கொண்டிருந்த போது விபத்து

நடந்துள்ளதாக தெரிய வருகிறது. கிழமேல் செல்லும் பேருந்தின் வலது புறம் ரோட்டின் வலதுபுறமாகும். இடது புறம் ரோட்டின் தெற்குப் பகுதியாகும். எ.சா.ஆ.1 சம்பவ வழக்கின் முதல் தகவல் அறிக்கையாகும். முதல் தகவல் அறிக்கையை சம்பவத்தை கண்ணுற்ற இறந்து போன நபரின் உறவினர் திரு.பழனிசாமி என்பவர் காவல்நிலையத்தில் கொடுத்துள்ளார். முதல் தகவல் அறிக்கை வழக்கின் அடிப்படை ஆவணமாகும். முதல் தகவல் அறிக்கையில் ரோட்டின் தென்புறமாக நின்றுகொண்டிருந்த தனது சித்தப்பா மீது பேருந்து மோதியது எனவும், அவர் ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்த போது பேருந்து மோதியது என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, வழக்கின் அடிப்படை ஆவணமான முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில் ரோட்டின் தென்புறம் நின்று கொண்டிருந்த அதாவது பேருந்தின் இடதுபுற சாலையில் நின்று கொண்டிருந்த நபர் மீது மோதியதாக தெரிய வருகிறது. குற்றச்சாட்டு குறிப்பாணையில் உள்ள ஷரத்திற்கும், விபத்து அறிக்கையில் உள்ள ஷரத்துக்களும், முதல் தகவல்

அறிக்கைக்கு நேர் எதிர்மாறாக உள்ளது. எனவே, குற்றச்சாட்டு குறிப்பாணை வழக்கின் அடிப்படை ஆவணமான முதல் தகவல் அறிக்கைக்கு எதிராக வழங்கப்பட்டுள்ளது என்பதாக முடிவு செய்கிறேன்.

18. எ.சா.ஆ.6ஐ பரிசீலனை செய்கையில் குற்றச்சாட்டு குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ளபடி வலது புறம் இருந்து சாலையை கடந்த நபர் மீது பேருந்து கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாக ஓட்டி விபத்து ஏற்படுத்தியதாக சங்க உறுப்பினரிடம் கேள்வி கேட்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. முதல் தகவல் அறிக்கையில் சாலையின் தெற்குப் பகுதியில் இறந்துபோன நபர் நின்று கொண்டிருந்தபோது விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உள்ளக விசாரணை அதிகாரி அந்த விபரத்தை கருத்தில் கொள்ளவில்லை. உள்ளக விசாரணையின் போது சங்க உறுப்பினர் சார்பாக சுந்தர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது 28.09.2010 நாளிட்ட கடிதம் தொ.சா.ஆ.1 எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு தனது

சாட்சியத்திலும், தான் தாக்கல் செய்துள்ள கடிதத்திலும் ரோட்டின் இடதுபுறமிருந்து வலதுபுறமாக குறுக்காக செல்ல முயன்றபோது சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளார். அவரின் சாட்சியத்தை விசாரணை அதிகாரி நிராகரித்துள்ளார். தொ.சா.ஆ.1 கடிதத்தில் உள்ள ஷரத்துக்கள் அடிப்படை ஆவணமான முதல் தகவல் அறிக்கையில் உள்ள கூற்றிற்கு ஏற்பளிக்கும் விதத்தில் உள்ளது. தொ.சா.ஆ.2 சங்க உறுப்பினர் 01.10.2010ல் கிளை மேலாளருக்கு அனுப்பிய கடிதம் ஆகும். அந்த கடிதத்தில் சம்பவ இடத்தில் வழக்கில் இறந்து போன நபர் ரோட்டின் இடதுபுறம் அதாவது ரோட்டின் தென் பகுதியிலிருந்து வட பகுதிக்கு குறுக்காக சென்ற போது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உள்ளக விசாரணை அதிகாரி இறந்துபோன நபர் வலது புறத்திலிருந்து சாலையை அதாவது சாலையின் வலது பக்கத்திலிருந்து குறுக்காக சாலையை கடக்க முயன்றபோது விபத்து ஏற்பட்டதாக முடிவுக்கு வந்துள்ளார். அவரது முடிவானது வழக்கின் அடிப்படை ஆவணமான முதல்தகவல் அறிக்கைக்கு எதிராக உள்ளது. முதல் தகவல் அறிக்கையை தாக்கல்

செய்த நபர் இறந்துபோன நபரின் நெருங்கிய உறவினர் என்பதும், சம்பவத்தை நேரடியாக கண்ணுற்ற சாட்சியும் ஆகும். முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் சங்க உறுப்பினரின் விளக்கமும், சங்க உறுப்பினர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சுந்தர் என்பவருடைய சாட்சியமும், அவர் நிர்வாகத்திற்கு 28.09.2010ல் எழுதியுள்ள தொ.சா.ஆ.1 கடிதம் ஏற்பளிக்கும் விதத்தில் உள்ளபடியால், விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கை சரியாகவும், முறையாகவும், இல்லை என்பதாக முடிவு செய்கிறேன்.

19. மேலும் எ.சா.ஆ.6 உள்ளக விசாரணை அதிகாரியின் அறிக்கையில் விபத்திற்கு காரணம் ஓட்டுநரும் பாதசாரியும் (இறந்துபோன நபரும்) என குறிப்பிட்டுள்ளார். மேலும் இரவு வேளையில் சாலையை கடக்கும் நபர் சாலையின் இருபுறமும் வாகனம் வருகிறதா என்பதை பார்த்து சாலையை கடந்திருந்தால் இந்த விபத்தை தவிர்திருக்கலாம் என குறிப்பிட்டுள்ளார். எனவே விசாரணை அதிகாரியின் அறிக்கைப்படி விபத்திற்கு காரணம் சங்க உறுப்பினரும், ரோட்டை

கடக்க முயன்ற பாதசாரியும் (இறந்துபோன நபரும்) என்பதாக முடிவு செய்துள்ளார். அவ்வாறான நிலையில், சங்க உறுப்பினர் தான் குற்றமுறு செயலுக்கு முழு காரணம் என்பதாக முடிவு செய்து அவர் நிலையாணை பிரிவு 14(a) மற்றும் 14(ad)ன்படியான ஒழுங்கீனச்செயலை புரிந்துள்ளார் என்பது நிரூபணம் ஆகியுள்ளது என்று விசாரணை அதிகாரி முடிவு செய்துள்ளது நீதியின்பால்பட்டதல்ல என தீர்மானிக்கிறேன். மேலே கூறிய காரணங்களினால் சங்கஉறுப்பினருக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையும், அதன் அடிப்படையில் நடத்தப்பட்ட உள்ளக விசாரணையும், மற்றும் உள்ளக விசாரணை அறிக்கையும் முறையாகவும், சரியாகவும் இல்லை என்பதாக முடிவு செய்து அந்த அறிக்கையை ரத்து செய்து பிரச்சனைக்கு இவ்வாறாக விடையளிக்கிறேன்.

மேல் நடவடிக்கைக்காக 09.02.2026.

(இந்த தீர்வம் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம்

செய்யப்பட்டு இன்று 2026ம் வருடம் பிப்ரவரி மாதம் 4ம் நாள் என்னால் நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.)

LATHA A P Digitally signed by LATHA A P Date: 2026.02.04 19:16:06 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்** :

- இல்லை -

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்** :

- இல்லை -

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :

| ஆவண எண் | தேதி | விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.1 | 28.09.2010 | சங்க உறுப்பினர் தரப்பில் நேரடி சாட்சியமளிக்க முன்வந்த ஜே.சுந்தர் அவர்களின் கடிதம். | நகல் |
| தொ.சா.ஆ.2 | 01.10.2010 | சங்க உறுப்பினர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடிதம். | நகல் |
| தொ.சா.ஆ.3 | 19.10.2010 | குற்றச்சாட்டு குறிப்பாணை. | அசல் |
| தொ.சா.ஆ.4 | 27.10.2010 | சங்கஉறுப்பினர் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு விளக்கம் அளித்தல் கடிதம். | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.5 | 18.06.2011 | சங்கஉறுப்பினர் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு ஆட்சேபனை தெரிவித்து எதிர்மனுதாரருக்கு அளித்த கடிதம். | நகல் |
| தொ.சா.ஆ.6 | 24.07.2011 | சங்க உறுப்பினர் எதிர்மனுதாரர் நிர்வாகம் அனுப்பிய அறிவிப்பிற்கு சமாதானம் தெரிவித்து அனுப்பிய கடிதம். | நகல் |
| தொ.சா.ஆ.7 | 10.08.2011 | உத்தரவு. | அசல் |
| தொ.சா.ஆ.8 | 27.10.2012 | மேல்முறையீட்டு கடிதம். | நகல் |
| தொ.சா.ஆ.9 | 17.03.2023 | சமரச முறிவறிக்கை. | நகல் |

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :

| ஆவண எண் | தேதி | விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| எ.சா.ஆ.1 | 29.03.2006 | FIR No.343/2006 வழக்கின் முதல் தகவல் அறிக்கை. | நகல் |
| எ.சா.ஆ.2 | 05.10.2010 | விரிவான விபத்தறிக்கை, பொறியாளரின் அறிக்கை, மாதிரி வரைபடம், ஒளிப்பட நகல், கிளை மேலாளரின் அறிக்கை. | நகல் |
| எ.சா.ஆ.3 | 27.10.2010 | சங்க உறுப்பினர் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு அளித்த கடிதம்.குற்றச்சாட்டு குறிப்பாணை. | நகல் |
| எ.சா.ஆ.4 | 19.10.2010 | குற்றச்சாட்டு குறிப்பாணை. | நகல் |
| எ.சா.ஆ.5 | 28.10.2010 | 1/ஜி5/474/த.அ.போ.க./2010 மீண்டும் பணியில் சேர வழங்கப்பட்ட உத்தரவு. | நகல் |
| எ.சா.ஆ.6 | 25.05.2011 | விசாரணை அதிகாரியின் அறிக்கை. | நகல் |

| | | | |
|---|---|---|---|
| எ.சா.ஆ.7 | 27.04.2011 | உள்ளக விசாரணை நடவடிக்கை குறிப்புகள். | நகல் |
| எ.சா.ஆ.8 | 10.08.2011 | உத்தரவு. | நகல் |
| எ.சா.ஆ.9 | --- | சங்க உறுப்பினரின் ஒழுங்கு நடவடிக்கை. | நகல் |

LATHA A P

Digitally signed by LATHA A P
Date: 2026.02.04 19:16:17 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.

Copy of Fair/Draft Order in
ID No.69/2024,
Date : 04.02.2026,
PLC, CBE.